கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், செய்யாறு,
திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் உதவி அமர்வு நீதிபதி, செய்யாறு.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 15ஆம் நாள் புதன்கிழமை

**அமர்வு வழக்கு எண்.137/2011**

**CNR.No.TNTM04-000227-2011**

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
மதுவிலக்கு அமல் பிரிவு,
செய்யாறு. . . . குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

1. தேசிகா (எ) தெய்வசிகாமணி,
2. பாலாஜி,
3. பாலு, . . . குற்றம் சாட்டப்பட்டவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | **முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்** | : | பி.ஆர்.சி.எண்.1/2011 |
| 2. | **வனையப்பட்ட குற்றச்சாட்டு** | | |
| அ. | குற்றம் சாட்டப்பட்டது | : | 4(1)(aaa) R/W 4(1-A)ii மதுவிலக்கு சட்டம மற்றும் 6 RS Rules 2008. |
| ஆ. | குற்றம் வனையப்பட்டது | : | 4(1)(aaa) R/W 4(1-A)ii மதுவிலக்கு சட்டம மற்றும் 6 RS Rules 2008. |
| 3. | தொழில் | : | - |
| 4. | எதிரிகளின் பெயர் மற்றும் முகவரி | : | 1. தேசிகா (எ) தெய்வசிகாமணி, வயது 34, த/பெ.இன்பம், கன்னிநகர், செய்யார், 2. பாலாஜி, வயது 31, த/பெ.இன்பம், கன்னிநகர், செய்யார். 3.பாலு, வயது 25, த/பெ.புனிதன், கன்னிநகர், செய்யார். |
| 5. | குற்ற நிகழ்வு | : | 15.02.2010 |



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:22:14 +0530

| | | | |
|---|---|---|---|
| 6. | புகார் | : | 15.02.2010 |
| 7. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1ம் எதிரி – 15.02.2010 |
| 8. | எதிரிகள் பிணையில் வந்த நாள் | : | 1ம் எதிரி – 26.02.2010<br>2, 3 எதிரிகள் 26.08.2011 |
| 9. | நீதிமன்ற விசாரணை துவங்கிய நாள் | : | 17.07.2013 |
| 10. | நீதிமன்ற விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 01.04.2026 |
| 11. | பிணைக்காலம் | : | 1ம் எதிரி – 15.02.2010 முதல் 26.02.2010 வரை.<br>2, 3 எதிரிகள் உயர்நீதிமன்றத்தின் மூலம் முன் பிணை பெற்றனர். |
| 12. | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | : | 15.10.2010 |
| 13. | குவிமுச பிரிவு 240ன் கீழ் முதல் கேள்வி நாள் | : | 17.07.2013 |
| 14. | பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்தரவு | : | -- |
| 15. | முதல் மற்றும் குறுக்கு விசாரணை | : | |

| அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 23.07.2014 | 23.07.2014 |
| அ.சா.2 | 23.07.2014 | 23.07.2014 |
| அ.சா.3 | 23.07.2014 | 23.07.2014 |
| அ.சா.4 | 23.07.2014 | 23.07.2014 |
| அ.சா.5 | 21.09.2016 | 21.09.2016 |
| அ.சா.6 | 04.04.2018 | 04.04.2018 |
| அ.சா.7 | 25.04.2018 | 25.04.2018 |
| அ.சா.8 | 24.03.2026 | 24.03.2026 |
| அ.சா.9 | 03.01.2019 | 03.01.2019 |
| அ.சா.10 | 12.08.2025 | – |



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:22:22 +0530

| | | | |
|---|---|---|---|
| 16. | குவிமுச பிரிவு 313ன் கீழ் கேள்வி நாள் | : | 01.04.2026 |
| 17. | எதிரிகளின் பதிலுரை | : | பொய் சாட்சி, பொய் வழக்கு, எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியுள்ளார். |
| 18. | தலைமறைவு எதிரியின் விவரங்கள்/ஆஜர்/ஒப்படைப்பு | : | 2. பாலாஜி, வயது 31, த/பெ.இன்பம், கன்னிநகர், செய்யார்.<br>3.பாலு, வயது 25, த/பெ.புனிதன், கன்னிநகர், செய்யார்.<br>2, 3 எதிரிகள் உயர்நீதிமன்றத்தின் மூலம் முன் பிணை பெற்று ஆஜர். |
| 19. | மேலாண்மை நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட/நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும். | : | -- |
| 20. | நீதிமன்ற முடிவு அல்லது ஆணை | : | இறுதியாக, எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் எதிரிகள் மீதான 4(1)(aaa) R/W 4(1-A)ii மதுவிலக்கு சட்டம் மற்றும் 6 RS Rules 2008 - படி எதிரிகள் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1) பிரிவின் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 21. | சான்றுபொருட்கள் பற்றிஉத்தரவு | : | இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 35 லிட்டர் கொள்ளவுள்ள 10 வெள்ளை நிற பிளாஸ்டிக் |

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:22:28 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | கேன்களில் தலா 35 லிட்டர் வீதம் இருந்த எரிசாராயம் மொத்தம் 350 லிட்டர் ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும், பிளாஸ்டிக்கேன்கள் மற்றும் கண்ணாடி பாட்டில்கள் அரசுக்கு ஆதாயம் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 01.04.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் திரு.G.தினேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.K.கௌதமன் அவர்கள் ஆஜராகியும், 2, 3ஆம் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ராமு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

கடந்த 15.02.2010ஆம் தேதி காலை 4.00 மணியளவில் செய்யார் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல்நிலைய எல்லைக்குட்பட்ட, செய்யார் to

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:22:36 +0530

ஆரணி செல்லும் ரோட்டில் வடுகப்பட்டு கிராமம் அருகே எதிரிகள் சுமார் 35 லிட்டர் கொள்ளவுள்ள 10 வெள்ளைநிற பிளாஸ்டிக் கேனில் தலா 35 லிட்டர் வீதம் 350லிட்டர் அளவுள்ள விஷ வாடையுடன் மற்றும் சாராய நெடியுடன் கூடிய அட்ரோபின்என்ற நச்சுத் தன்மையுள்ள எரி சாராயத்தை வைத்திருநதும் அதை குடிப்பவர்கள் உடலுக்கு தீங்கு ஏற்டும் என்று நன்கு தெரிந்தே, மேற்படி எரி சாராயத்தை TN21 J6355 என்ற எண்ணுள்ள TATA 207 EX என்ற வெள்ளை நிற டெம்போவில் கடத்தி வந்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகள் 4(1)(aaa) R/W 4(1-A)ii மதுவிலக்கு சட்டம் மற்றும் 6 RS Rules 2008 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக செய்யார் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கைதாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் செய்யார் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கை செய்யாறு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் - II ல் PRC No. 01/2011 என்ற எண்ணின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிகளுக்கு இலவசமாக சார்வு செய்யப்பட்டு பின்னர் இவ்வழக்கானது திருவண்ணாமலை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க்கப்பட்டு இவ்வழக்கில் ஆள்வரை நிலையின் காரணமாக இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டு SC No. 137/2011 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் எதிரிகள் முன்னிலையாகி வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டுவிட்டதா என இந்நீதிமன்றம் உறுதி செய்ததற்கு பின்னர் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 4(1)(aaa)



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:22:44 +0530

R/W 4(1–A)ii மதுவிலக்கு சட்டம மற்றும் 6 RS Rules 2008 – ன் படியான தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளீர்கள் என்று எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் அவர்கள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்ததின்பேரில் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்வதற்காக அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகளும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களும் மற்றும் அரசு தரப்பு சான்று பொருட்கள் 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பிற்கு போதிய வாய்ப்புக்கள் வழங்கியும், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்து குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் சுருக்க விவரம் பின்வருமாறு:</u>**

அரசு தரப்பில் திருமதி.பிரேமா காவல் உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமல் பிரிவு செய்யாறு அவர்கள் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் மதுவிலக்கு பிரிவில் பணியில் இருந்தபோது 15.02.2010ஆம் தேதி செய்யார் – ஆரணி ரோட்டில் வடுகப்பட்டு கிராமம் அருகில் வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தபோது ஆரணி ரோட்டில் சென்றுக்கொண்டிருந்த டெம்போ வண்டி டாடா 207 TN.21 J 6355 என்ற வாகனத்தை நிறுத்தி பார்க்க அதில் இருந்த மூவரும் இறங்கி தப்பித்து ஓடியவர்களை பிடிக்க முயன்றபோது அதில் ஒருவர் மட்டும் பிடிப்பட்டார் என்றும், வண்டியில் இருந்து தப்பித்து ஓடியவர்கள் எதிரிகள் தான் என்றும், காவல் ஆய்வாளர் அவர்கள் அந்த வாகனத்தை தணிக்கை செய்தபோது அதில் 10 வெள்ளை நிற கேன்கள் ஒவ்வொன்றும் 35 லிட்டர் கொள் அளவு உள்ள கேன்கள்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:22:52 +0530

இருந்தது என்றும், பிடிப்பட்ட எதிரியை காவல் ஆய்வாளர் விசாரிக்க அவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் தியாகசெம்மல் தலைமை காவலர் ஆகியோர் கையெழுத்து செய்தோம் என்றும், ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தில் கைப்பற்றிய 10 கேன்களில் இருந்து மாதிரிக்கு ஒவ்வொரு கேன்களில் இருந்தும் தலா 500 எம்.எல்.வீதம் ஒவ்வொரு கேன்களில் இருந்து 2 பாட்டில்களில் எடுத்து கைப்பற்றினார் என்றும், அந்த கேன்களில் இருந்தது விஷ நெடியுடன் கூடிய விஷ சாராயம் என காவல் ஆய்வாளர் அறிவித்தார் என்றும், அந்த கேன்களில் இருந்தது விஷ நெடியுடன் கூடிய விஷசாராயம் என காவல் ஆய்வாளர் அறிவித்தார் என்றும், டெம்போ வண்டி 10 பிளாஸ்டிக் கேன்கள் மாதிரிக்கு எடுக்கப்பட்ட பாட்டில்கள் ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினார் என்றும், அந்த மகசரில் தானும் தியாகசெம்பல் ஆகியோர் கையெழுத்து செய்ததாகவும், காவல் ஆய்வாளர் அவர்கள் பார்ட்டி சகிதம் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காவல்நிலையத்திற்கு 00.13 மணிக்கு அடைந்து செய்யார் மதுவிலக்கு காவல்நிலைய குற்ற எண்.186/2010 4(1) (எஎஎ) உ/இ 4(1–ஏ) மதுவிலக்கு சட்டம் மற்றும் ஆர் எஸ் சட்டம் 6ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 தியாகச்செம்பல் அவர்கள் தனது சாட்சியத்தில் திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் மதுவிலக்கு பிரிவில் பணியில் இருந்தபோது 15.02.2010ஆம் தேதி தானும் உதவி ஆய்வாளர் பிரேமா மற்றும் காவலர்கள் சகிதம் காவல் ஆய்வாளர் அவர்கள் உடன் மதுவிலக்கு சம்பந்தமாக விடியற்காலை 4 மணிக்கு செய்யார் – ஆரணி ரோட்டில் வடுகப்பட்டு கிராமம் அருகில் உள்ள சிறிய பாலத்திடம் வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தபோது ஆரணி ரோட்டில் சென்றுக்கொண்டிருந்த டெம்போ வண்டி டாடா 207 TN.21 J 6355 என்ற வாகனத்தை நிறுத்தி பார்க்க அதில் இருந்த மூவரும் இறங்கி தப்பித்து ஓடியவர்களை பிடிக்க முயன்றபோது அதில் ஒருவர் மட்டும் பிடிப்பட்டார் என்றும், வண்டியில் இருந்து தப்பித்து ஓடியவர்கள் எதிரிகள் தான் என்றும், காவல் ஆய்வாளர் அவர்கள் அந்த வாகனத்தை தணிக்கை செய்தபோது அதில் 10 வெள்ளை நிற கேன்கள் ஒவ்வொன்றும் 35 லிட்டர் கொள்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:22:57 +0530

அளவு உள்ள கேன்கள் இருந்தது என்றும், பிடிப்பட்ட எதிரியை காவல் ஆய்வாளர் விசாரிக்க அவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் உதவி ஆய்வாளர் பிரேமா ஆகியோர் கையெழுத்து செய்தோம் என்றும், ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தில் கைப்பற்றிய 10 கேன்களில் இருந்து மாதிரிக்கு ஒவ்வொரு கேன்களில் இருந்தும் தலா 500 எம்.எல்.வீதம் ஒவ்வொரு கேன்களில் இருந்து 2 பாட்டில்களில் எடுத்து கைப்பற்றினார் என்றும், அந்த கேன்களில் இருந்தது விஷ நெடியுடன் கூடிய விஷ சாராயம் என காவல் ஆய்வாளர் அறிவித்தார் என்றும், அந்த கேன்களில் இருந்தது விஷ நெடியுடன் கூடிய விஷசாராயம் என காவல் ஆய்வாளர் அறிவித்தார் என்றும், டெம்போ வண்டி 10 பிளாஸ்டிக் கேன்கள் மாதிரிக்கு எடுக்கப்பட்ட பாட்டில்கள் ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினார் என்றும், அந்த மகசரில் தானும் உதவி ஆய்வாளர் பிரேமா ஆகியோர் கையெழுத்து செய்ததாகவும், காவல் ஆய்வாளர் அவர்கள் பார்ட்டி சகிதம் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காவல்நிலையத்திற்கு 00.13 மணிக்கு அடைந்து செய்யார் மதுவிலக்கு காவல்நிலைய குற்ற எண்.186/2010 4(1) (எஎஎ) உ/இ 4(1–ஏ) மதுவிலக்கு சட்டம் மற்றும் ஆர் எஸ் சட்டம் 6ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.3 திரு.முனுசாமி அவர்கள் தனது சாட்சியத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையெழுத்தை தான் காவல் நிலையத்தில் வைத்து போட்டதாகவும்,வேலை செய்துவிட்டு அந்த பக்கமாக வரும்போது காவல்நிலையத்தில் கையெழுத்து போடும்படி கேட்டனர் என்றும், தான் போட்டுக்கொடுத்ததாகவும், எழுதாத வெள்ளை பேப்பரில் தான் போட்டதாகவும், எதற்காக போட்டேன் என்று தெரியாது என்றும், கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 என்றும் அரசு தரப்பிற்கு விரோதமாக பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 திரு.புன்னியக்கோட்டி அவர்கள் தனது சாட்சியத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையெழுத்தை தான் காவல் நிலையத்தில் வைத்து போட்டதாகவும்,வேலை செய்துவிட்டு அந்த பக்கமாக வரும்போது


M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:23:04 +0530

காவல்நிலையத்தில் கையெழுத்து போடும்படி கேட்டனர் என்றும், தான் போட்டுக்கொடுத்ததாகவும், எழுதாத வெள்ளை பேப்பரில் தான் போட்டதாகவும், எதற்காக போட்டேன் என்று தெரியாது என்றும், கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 என்றும் அரசு தரப்பிற்கு விரோதமாக பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.5 திரு.ராகவன் அவர்கள் தனது சாட்சியத்தில் தான் களம்பூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், 18.02.2010 அன்று செய்யார் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்ததாகவும், மதுவிலக்கு சம்பந்தமாக ஆய்வாளர் வெங்கடேசன், உதவி ஆய்வாளர் திருமதி பிரேமா, த.கா.685 திரு.அசோக், தலைமை காவலர் தியாகசெம்மல், முனுசாமி ஆகியோர் சகிதம் சென்றபோது தான் மேற்படி எரி சாராயத்தை கைப்பற்றினோம் என்றும், குற்ற எண்.186/2010ல் கைப்பற்றப்பட்ட சுமார் 750 எம்.எல்.கொள் அளவு உள்ள பாட்டிலில் 500 எம்.எல் அளவுள்ள சாராயத்தை உள்ள பாட்டில்கள் 20 ஐ ரசாயன பரிசோதனைக்காக நீதிமன்றத்தில் இருந்து கொடுத்த வேண்டுகோள் கடிதத்துடன் பெற்று ரசயான பரிசோதனைக்காக ரசாயன பரிசோதனை கூடம் வேலூரில் ஒப்படைத்து ஒப்படைத்ததற்கான கடிதம் பெற்று வந்ததாகவும், இது குறித்து ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.6 திரு.ரகுநாதன் அவர்கள் தனது சாட்சியத்தில் தான் தற்சமயம் 110 உறதர் பட்டரை தெரு காஞ்சிபுரம் என்ற விலாசத்தில் குடியிருந்து வருவதாகவும், டிங்கரிங் வேலை செய்து வருகிறதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியாது என்றும், TN21 J6355 என்ற 207 டாடா வண்டியை புழலை சார்ந்த லட்சுமிகாந்தன் என்பவரிடமிருந்து வாங்கியதாகவும், மேற்படி வாகனத்தை 2009வருடத்தில் வாங்கியபோது ஸ்ரீராம்பைனான்ஸ் நிறுவனத்திடம் இருந்து கடன் பெற்றே வாங்கியதாகவும், அதே நிறுவனத்திடம் சொல்லி பாலாஜி என்பவருக்கு ரூ.2 லட்சத்திற்கு விற்பனை செய்ததாகவும், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:23:09 +0530

10. அ.சா.7 திரு. ஜேம்ஸ் அந்தோணிராஜ் அவர்கள் தனது சாட்சியத்தில் தான் தற்சமயம் தடய அறிவியல் துறை அலுவலகம், திருநெல்வேலியில் பணிபுரிந்து வருவதாகவும், வேலூர் மண்டல தடய அறிவியல் துறையில் அறிவியல் அலுவலர் நிலை 2 ஆக 2010ல் பணிபுரிந்து வந்தபோது, செய்யாறு மதுவிலக்கு அமல்பிரிவு குற்ற எண்.186/2010 வழக்கில் சம்பந்தப்பட்ட திரவங்கள் உடன் கூடிய பத்து பாட்டில்கள் சரியாக முத்திரையுடன் நீதித்துறை நடுவர் எண்.2, செய்யார் அவர்களின் கடித எண்.420/2010 நாள் 18.02.2010 என்ற கடிதத்துடன் ஆய்வகத்தில் பெறப்பட்டது என்றும், மேற்படி பத்து பாட்டில்களில் கண்ட திரவங்களை தான் பரிசோதனை செய்ததாகவும், அந்த திரவங்களில் ஆல்ஹகால் அமிலங்கள், கெஸ்டர்கள் மற்றும் ஆல்டிரைடு கண்டறியப்பட்டன என்றும், அந்த திரவங்கள் சற்று திறன் குறைந்த எரி சாராயங்கள் என கண்டறியப்பட்டது என்றும், அவை ஒவ்வொரு திரவத்திலும் 6.1 சதவீதம் அட்ரோபின் என்ற நச்சுப்பொருளும் கண்டறியப்பட்டது என்றும், அவைகள் அட்ரோபின் கலந்த திறன் குறைந்த எரி சாராயம் என தெரியவந்தது என்றும், அது சம்பந்தமாக தனது அறிக்கையை தயார் செய்து நீதித்துறை நடுவர் எண்.2 செய்யார் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும், தன்னால் பெறப்பட்ட ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 இதுசம்பந்தமாக ஆய்வாளர் அவர்கள் விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.8 திருமதி.கவிதா, காவல் ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில் தான் தற்போது செய்யாறு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருவதாகவும், இவ்வழக்கில் வழக்கு பதிவு செய்து சாட்சிகளை விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் திரு. N. வெங்கடேசன் என்பவருடன் பணி செய்த வகையில் அவருடைய கையெழுத்தும் கையொப்பமும் தனக்கு நன்கு தெரியும். காவல் ஆய்வாளர் வெங்கடேசன் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டார் என்றும், ஆவணங்கள் அடிப்படையில் தான் இவ்வழக்கில் கூடுதலாக சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 15.02.2010–ம் தேதி மதுவிலக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் உள்ளிட்ட


M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:23:16 +0530

காவலர்கள் விடியற்காலை 04.00 மணிக்கு செய்யாறு – ஆரணி ரோட்டில் வடுகப்பட்டு கிராமம் அருகே தணிக்கை செய்தபோது TN 21 J 6355 என்ற டாட்டா டெம்போ வேனே மடக்கி சோதனை செய்தபோது அதிலிருந்து ஒருவர் மட்டும் பிடிபட்டார், மற்றவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள் என்றும், அந்த வாகனத்தில் 35 லிட்டர் கொள்ளளவு கொண்ட 10 வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்களில் சுமார் 350 லிட்டர் எரிசாராயம் இருந்தது என்றும், எதிரியை பிடித்து விசாரிக்க அவரது பெயர் தெய்வசிகாமணி என்று சொன்னார் என்றும், பின்னர், காவல் ஆய்வாளரால் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட எரிசாராயம், மகஜர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றும், எதிரி தெய்வசிகாமணி குற்றத்தை ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், பின்னர், காவல் ஆய்வாளர் சாட்சிகள் பிரேமா, தியாகச்செம்மல், முனுசாமி, புன்னியகோட்டி, ராகவன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கின் சாட்சிகள் முனுசாமி, புன்னியகோட்டி ஆகியோர்கள் முன்னிலையில் 15.02.2010–ம் தேதி சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர், இவ்வழக்கின் எதிரி தேசிகா (எ) தெய்வசிகாமணி என்பவரை திரேக பரிசோதனை செய்து 15.02.2010–ம் தேதியன்று செய்யாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் சென்றுள்ளார். வழக்கின் மற்ற எதிரிகளான பாலாஜி, பாலு ஆகிய இருவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றுள்ளார்கள் என்றும், பின்னர், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 350 லிட்டர் எரிசாராயத்தை 500 m.l. அளவுள்ள 20 பாட்டில்களில் எடுத்து வழக்கு சொத்துடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு C.P.No. 11/2010 பெறப்பட்டு இரசாயன பரிசோதனைக்காக வேலூர் மண்டல தடய அறிவியல் பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும், பகுப்பாய்வு செய்ததில் கைப்பற்றப்பட்ட எரிசாராயத்தில் 6.1% அக்ரோட்டின் என்கின்ற நச்சு பொருள் கலந்துள்ளது என்றும், அவை எரிசாராயம் என்று நீதிமன்றத்திற்கு ஆய்வறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றும், பின்னர், காவல் ஆய்வாளர் இராசாயன பரிசோதனை செய்த வேலூர் மண்டல தடய அறிவியல் துறையை சார்ந்த திரு. ஜேம்ஸ்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:23:22 +0530

அந்தோணிராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர், காவல் ஆய்வாளர் வெங்கடேசன் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 4(1)(aaa) r/w. 4(1–A)(ii) TNP Act & 6 of RS Rules – ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து விளக்கி கூறி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) – ன் கீழ் வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய் சாட்சியம் எனவும், பொய் வழக்கு எனவும் எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனவும் கூறி எதிரிகள் தரப்பில் முடித்துக்கொள்ளப்பட்டது.

**13. இவ்வழக்கில் தீர்மாணிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் :**

அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**14. எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள 4(1)(aaa) r/w. 4(1–A)(ii) TNP Act 1937 & 6 of RS Rules 2008 – ன் படியான குற்றச்சாட்டுக்களுக்கான தீர்வுகள் :**

அரசு தரப்பு தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரிகளின் மீது இவ்வழக்கில் வனையப்பட்ட பிரிவுகள் 4(1)(aaa) r/w 4(1–A)(ii) TNP Act 1937ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று முடிவு செய்ய வேண்டியுள்ளது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:23:29 +0530

15. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் மற்றும் சான்றுபொருள்–I ஐ கொண்டு மிகத்தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு அதிகப்பட்ச தண்டனை மற்றும் அபராதம் விதிக்குமாறு வாதிட்டார்.

16. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரிகள் மீது புள்ளிவிவரக் கணக்கிற்காகவும், எதிரிகள் மீதுள்ள காற்புனர்ச்சி காரணமாகவும், பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு ஆவணங்கள் சான்று பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தாரால் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு, எந்தவொரு விசாரணையும் இன்றி எதிரிகள் மீது ஒரு பொய்யான இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் போலீஸார் அல்லாத தனிப்பட்ட சாட்சிகளை சாட்சிகளாக விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றும், சாட்சிகள் அனைவரும் காவல் துறையை சார்ந்த சாட்சிகள் என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

17. இவ்வழக்கின் சம்பவமானது 15.02.2010 காலை 4 மணியளவில் செய்யாறு டு ஆரணி செல்லும் ரோட்டில் வடுகப்பட்டு கிராமம் அருகே நடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கையானது காவல் ஆய்வாளர் வெங்கடேசன் என்பவர் மூலமாக 15.02.2010 மாலை 1 மணிக்கு வழக்கு பதிவு செய்ததாக உள்ளது. இவ்வழக்கின் 1ஆம் எதிரி



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:23:35 +0530

தேசிகா (எ) தெய்வசீகாமணி 15.02.2010ஆம் தேதி அதிகாலை 4 மணிக்கு கைது செய்யப்பட்டுள்ளார். அன்றைய தினமே 1ஆம் எதிரி தெய்வசிகாமணி என்பவரை இரவு 8.30மணிக்கு செய்யாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர், 1ஆம் எதிரி நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். மற்ற இரண்டு எதிரிகள் உயர்நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று செய்யாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.-IIல் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள்.

18. இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் வெங்கடேசன் 15.02.2010ஆம் தேதி மாலை 4 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள் முனுசாமி மற்றும் புண்ணியக்கோட்டி ஆகிய இருவர் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.8 பார்வை மகசர், அ.சா.ஆ.9 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கின் விசாரணை அதிகாரி தாக்கல் செய்த அ.சா.ஆ.9 வரைபடத்தில் சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்று அந்த இடத்தை குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை. பார்வை மகசர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 மற்றும் அ.சா.4 இருவரும் போலிசார் கேட்டுக்கொண்டதால் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டதாகவும், எதற்காக கையெழுத்துப்போட்டோம் என்று தெரியாது என்று அரசு தரப்பிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கில் மிக முக்கியமான சாட்சி அ.சா.1 காவல் உதவி ஆய்வாளர் பிரேமா ஆவார். அ.சா.1 முதல் விசாரணையில் 1ஆம் எதிரியை மடக்கி பிடித்தது குறித்தும், சம்பவம் குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 குறுக்குவிசாரணையில் இந்த வழக்கில் தனி நபர் யாரும் தகவல் கொடுக்கவில்லை.

19. தனி நபர் புகார் கொடுக்கவில்லை. தப்பித்து ஓடியவர்களை யார் துரத்தி சென்று பிடித்தார்கள் ஞாபகமில்லை என்று முதல்விசாரணையில் முரன்பட்டு



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:23:42 +0530

சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 செய்யாறு மதுவிலக்கு காவல்நிலையத்தைச் சார்ந்த சாட்சியாவார். இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4ஐ தவிர மற்ற சாட்சிகள் அனைவரும் செய்யாறு மதுவிலக்கு காவல்நிலையத்தை சார்ந்த சாட்சிகள் ஆவார்கள். மேலும் அ.சா.1 தனது விசாரணையில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் தான் சாட்சி கையொப்பமிட்டதாக சாட்சியம் அளித்துள்ளாரே தவிர எதிரி எந்த சங்கதிகளை கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்பதனை தன் சாட்சியத்தின் மூலம் விவரித்து எதுவும் கூறவில்லை. 1ஆம் எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலம் விடியற்காலை 4.15 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக உள்ளது. மகசர் அன்றையதினம் 4 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக உள்ளது. போலிசாரின் வழக்குப்படி முதலில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டதற்கு பிறகு 1ஆம் எதிரியிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்பதாகும். 1ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் மற்ற இரண்டு எதிரிகளின் பெயர் தெரியவந்தது என்பதே அரசு தரப்பு வழக்காகும். ஆனால் அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகசரில் அ.சா.ஆ.1 குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திற்கு முன்னரே அதில் தலைமறைவு எதிரிகள் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டு இருப்பதும், அரசு தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகம் ஏற்படும் வண்ணம் உள்ளது. மேலும், சம்பவமானது அதிகாலை 4 மணிக்கு நடந்தது என்று அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கையானது கிட்டத்தட்ட 9 மணிநேரம் கழித்து காலதாமதத்துடன் வழக்கு பதிவு செய்திருப்பதும் மிகுந்த சந்தேகத்தினை ஏற்படுத்துகிறது. அவ்வாறு 9 மணி



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:23:49 +0530

நேரம் காலதாமதம் எதற்காக ஏற்பட்டது என்பதற்கான காரணத்தையும் முதல் தகவல் அறிக்கையிலும் விசாரணை அதிகாரி தாக்கல் செய்த இறுதிஅறிக்கையிலும் விவரித்து எதுவும் கூறவில்லை. அவ்வாறு காலதாமதம் ஏற்பட்டது என்பதற்கு ஆதாரமாக எந்தவொரு ஆவண சாட்சியத்தினையும் முன்னிலைப்படுத்தவில்லை.

20. மேலும் அ.சா.1, காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் சேர்ந்து விடியற்காலை 4 மணிக்கு வாகன தனிக்கை செய்து கொண்டிருந்தபோது எதிரிகளின் வாகனத்தை மடக்கி பிடித்தபோது அதில் 10 வெள்ளை நிற கேன்களில் விஷ நெடியுடன் கூடிய விஷ சாராயம் வைத்திருந்தார்கள் என்றும், அதில் 2 எதிரிகள் தப்பித்து ஓடிவிட்டார்கள் என்றும், 1ஆம் எதிரியை மட்டுமே பிடித்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்று இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அன்றைய தினம் புகாரின் பெயரில் வாகன தனிக்கை செய்யப்பட்டதா அல்லது தனிச்சையாக ரோந்து பணியின் போது வாகன தனிக்கை செய்யப்பட்டதா என்பது குறித்து இறுதிஅறிக்கையில் விவரித்து எதுவும் கூறவில்லை. மேலும், சம்பவம் நடந்த அன்று காவல் ஆய்வாளர் தலைமையில் வாகன தனிக்கை செய்யப்பட்டது என்பதற்கு ஆதாரமாக காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் எந்தவொரு பதிவேட்டு குறிப்புகளையும், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அன்றைய தினம் வாகன தனிக்கை செய்யப்பட்டது என்பதனையும் அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. மேலும், போலிசார் அல்லாத சாட்சிகள் முன்னிலையில் ஏன் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை. ஏன் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான காரணத்தையும் விசாரணை அதிகாரி விவரித்து ஏதும் கூறவில்லை.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:23:57 +0530

21. காவல் துறை தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் முதல் விசாரணையிலும் குறுக்குவிசாரணையிலும் ஒன்றுக்கொன்று மற்றொருவர் முரன்பட்டே சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.7 தடய அறிவியல் துறை சாட்சியாவார் அவரது சாட்சியத்தில் மாதிரிக்காக கொண்டுவரப்பட்ட சாராயத்தினை பரிசீலனை செய்து 6.1% அட்ரொபின் என்ற நச்சுப்பொருள் கண்டறியப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சம்பவயிட சாட்சிகள் அனைவரும் போலிசார் தரப்பு சாட்சிகள் ஆவார்கள். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.3ஐ தவிர மற்ற தனிப்பட்ட சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை. மேலும் அ.சா.1, அ.சா.2 இருவரும் எதிரிகள் வைத்திருந்த சாராயம் விஷ சாராயம் என்றும், அதனை நுகர்ந்து பார்த்தால் கண் எரிச்சலும், வாந்தியும் வந்தது என்றும் குறிப்பிட்டு எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1, அ.சா.2, அ.சா.5 மற்றும் அ.சா.7 ஆகியோர் அளித்துள்ள சாட்சியம் எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்கு போதுமானதாக இல்லை. மேற்படி சாட்சிகள் அளித்துள்ள சாட்சியம் ஒன்றுக்கொன்று முரன்பட்டே காணப்படுகிறது. சம்பவ தினத்தன்று எதிரிகளிடமிருந்து TN21 J6355 என்ற எண்ணுள்ள TATA 207 EX என்ற வெள்ளை நிற டெம்போவில் சுமார் 350 லிட்டர் விஷ சாராயத்தினை கடத்தி வந்தார்கள் என்பதனையும், அவர்களில் 1ஆம் எதிரியை மடக்கி பிடித்து விசாரணை செய்தபோது அவர் 2, 3 எதிரிகளுடன் சேர்ந்து எரி சாராயத்தை விற்பனைக்காக கடத்திவந்தார் என்று தன்னிச்சையாக ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்பதனையும், அன்றையதினம் கைப்பற்றுதல் மகசரில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்பதனையும், அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்களைக் கொண்டு



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:24:02 +0530

நிரூபிக்கப்படவில்லை. மேலும், இவ்வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் அல்லாத சம்பவயிட சாட்சிகளாக மதுவிலக்கு காவல்நிலையத்தில் பணி செய்த போலிசாரையை சாட்சிகளாக காண்பித்து வழக்கு பதிவு செய்து இறுதிஅறிக்கை தாக்கல் செய்திருப்பதும் மிகுந்த சந்தேகத்தினை ஏற்படுத்துகிறது. எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகளின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் எதிரிகள் மீதான 4(1)(aaa) R/W 4(1–A)ii மதுவிலக்கு சட்டம மற்றும் 6 RS Rules 2008 – படி எதிரிகள் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1) பிரிவின் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 35 லிட்டர் கொள்ளவுள்ள 10 வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்களில் தலா 35 லிட்டர் வீதம் இருந்த எரிசாராயம் மொத்தம் 350 லிட்டர் ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும், பிளாஸ்டிக்கேன்கள் மற்றும் கண்ணாடி பாட்டில்கள் அரசுக்கு ஆதாயம் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:24:09 +0530

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்டு 15ம் நாள் ஏப்ரல் மாதம் 2026ஆம் தேதியன்று இத்திறந்த நீதிமன்றத்தில அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:24:15 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி
செய்யாறு.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திருமதி.பிரேமா, காவல் உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, செய்யார். |
| 2. | அ.சா.2 | திரு.தியாகச்செம்மல், த.கா.910, மதுவிலக்கு அமல்பிரிவு, செய்யார். |
| 3. | அ.சா.3 | திரு.முனுசாமி, த/பெ.பெரியபையன், |
| 4. | அ.சா.4 | திரு.புன்னியக்கோட்டி, த/பெ.முனுசாமி |
| 5. | அ.சா.5 | திரு.ராகவன், த.கா.834, மதுவிலக்கு அமல்பிரிவு, செய்யார். |
| 6. | அ.சா.6 | திரு.ஜேம்ஸ் அந்தோணிராஜ், மண்டலதடய அறிவியல் கூடம், வேலூர். |
| 7. | அ.சா.7 | திரு.ரகுநாதன், த/பெ.சென்னியப்பன் |
| 8. | அ.சா.8 | திரு.வெங்கடேசன், காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, செய்யார். |
| 9. | அ.சா.9 | திருமதி.கவிதா, காவல் ஆய்வாளர், PEW செய்யார். |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | தேசிகா(எ) தெய்வசிகாமணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.3 | பார்வை மகசரிலுள்ள உள்ள அ.சா.3ன் கையெப்பம் |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசரிலுள்ள உள்ள அ.சா.4ன் கையெப்பம் |
| அ.சா.ஆ.5 | ரசாயன பரிசோதனைக்கு அனுப்ப சொல்லி ஆய்வாளரால் |



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:24:23 +0530

| | |
|---|---|
| | கொடுக்கப்பட்ட வேண்டுகொள் கடிதம் |
| அ.சா.ஆ.6 | ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.7 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.9 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட படிவம் – 91 |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்கள்</u>**

அ.சா.பொ.1 2 வெள்ளை நிற பாட்டில்கள் சா.பொ.1 வரிசை.

**<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்று பொருள்கள்</u>**

இல்லை

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.15 11:24:29 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி
செய்யாறு.